செ. கு. எண்: 331 நாள் : 17.12.2013

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை –17.12.2013

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.பாலசுப்பிரமணியம் அவர்கள் 18.11.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், மயிலாப்பூர் காவல் நிலைய போக்குவரத்துப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. T.சேகர் அவர்கள் 19.11.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

கன்னியமாகுமரி மாவட்டம், கீரிப்பாறை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு.ரைமன்ட் அவர்கள் 19.11.2013 அன்று காளிகேசம் அருகே ஆற்றில் விழுந்த தனது மகளை காப்பாற்ற முயன்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், ஆயுதப்படை “F” நிறுமம் 34-ம் அணியில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு A. சதிஷ்குமார் அவர்கள் 22.11.2013 அன்று மரத்திலிருந்து தவறி கீழே விழுந்து பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M. கணேசன் அவர்கள் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 23.11.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், ஆயுதப்படை பிரிவில் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. K.பிரபாகரன் அவர்கள் 23.11.2013 அன்று வெளிப்பாளையம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை நகரம், தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் நிலையத்தில் தீயணைப்போராகப் பணி புரிந்து வந்த திரு. K.சந்திரசேகரன் அவர்கள் 23.11.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், வண்ணாரப்பேட்டை அரசு புறநகர் மருத்துவமனை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.M.அமானுல்லா அவர்கள் 24.11.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், பாதுகாப்பு பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு K.ராஜேந்திரன் அவர்கள் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 25.11.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், பழனி நகரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு K.சரவணன் அவர்கள் 25.11.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் பாலசுப்பிரமணியம், சேகர், ரைமன்ட், கணேசன், அமானுல்லா, ராஜேந்திரன்; தலைமைக் காவலர் சரவணன்; காவலர்கள் சதிஷ்குமார், பிரபாகரன் மற்றும் தீயணைப்போர் சந்திரசேகரன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த தீயணைப்போர் மற்றும் காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9